1967 ஜூலை 13]

சேத்தியாதோப்பு அணைக்கட்டு

*315 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, சேத்தியாதோப்பு அணைக்கட்டு பஸ் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக ரொம்பவும் குறுகி இருப்பதால் அதை புதுப்பித்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) and (இ) உறுப்பினர் குறிப்பிட்ட வேலையை மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துப் கொள்வதற்கான ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு வழியாக போக்குவரத்து அதிகம் இருக்கிறது. இப்போது தமிழக அரசு பஸ்களும் போகின்றன. ஆகவே உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்கு சாலை நிதி ஒதுக்கத்தில் 129 லட்சம் ஒதுக்கப்பட வேண்டும். அது ஒதுக்கப்படுகிற நேரத்தில், இந்தப் பால வேலை எடுத்துக்கொள்ளப்படும். பொறியாளர்கள் இதற்கான வரைப்படத்தையும், மதிப்பீட்டினையும் தயார் செய்து வருகிறார்கள். 20 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்கிறார்கள். ஆகவே அந்த நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Tahsildars in Kanyakumari district

*316 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) how many Tahsildars are there from other Districts working in Kanyakumari district, and

(*b*) if so, on what special grounds they have heen posted to this district ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Two Tahsildars from Tirunelveli district are working in Kanyakumari district.

(*b*) Qualified Tahsildars are not available in Kanyakumari district.

THIRU A. CHIDAMBARANATHA NADAR : Sir, may I know who are the Tahsildars from other districts who are working now in the Kanyakumari district ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not expected to know the names of each tahsildar. Perhaps the hon. Member because of his familiarity with the Kanyakumari district may have known those names.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தகுதி வாய்ந்த நபர்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் தாசில்தாராக வருவதற்கு இருக்கிறார்கள். டபிள் டிகிரி ஹோல்டர்கள் இருந்தும் வேண்டுமென்றே அவர்களுடைய சீனியாரிடியைப் புறக்கணித்து, வெளியில் இருந்து ஆட்களைக் கொண்டுவந்து அவர்களுடைய ப்ரமோஷன்களைத் தடை செய்வதற்குக் காரணம் என்ன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is incorrect to say that there are qualified people. Kanyakumari district is short of qualified personnel to man the posts of Deputy Tahsildars and Tahsildars. Persons are included in the lists year after year by grant of concessions and exemptions from rules. Notwithstanding this, it has become necessary to borrow staff from Tirunelveli district to man certain posts in the Civil Supplies Branch. The number of persons so taken on deputation depends on the number of persons that cannot be filled by local qualified personnel from time to time. Both the persons now working in Kanyakumari district are already in the list of Tahsildars for Tirunelveli district. No one included in the list of Tahsildars for Kanyakumari district is acting in a lower post.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : கன்னியாகுமரி மாவட்டத்திலேயே தாசில்தாராக வருவதற்குத் தகுதியான நபர்கள் இருந்தும் அடுத்த மாவட்டத்தில் இருந்து அங்கே கொண்டுவருவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தவறான வாதத்தை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வது நியாயம் ஆகாது. தாசில்தாருக்குள்ள விதிகளை பல தடவைகள் தளர்த்தியும் கூட, அந்தப் பகுதியில் இருந்தே தாசில்தாராக வருவதற்கு தகுதி உடையவர்கள் இல்லை. ஆகவே வெளியில் இருந்து கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது.

அரசு மருத்துவ மனைகள்

*** 317 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா சேத்தியாதோப்பில் இருக்கும் அரசாங்க மருத்துவ நிலையம் (Maternity Centre) சுமார் 6 மாத காலமாக மூடிக் கிடப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அதை உடனடியாக திறக்க உத்தேசம் எதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சேத்தியாத்தோப்பிலுள்ள அரசு மருத்துவ மனையும், மகப்பேறு இல்லமும்அமைந்துள்ள கட்டிடம் சீர்கேடான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததாலும், அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்துவது ஆபத்தானதென்று பொதுப் பணித்துறை அதிகாரிகள் அறிவித்திருந்ததாலும், மேற்படி மருத்துவ மனையையும் மகப்பேறு இல்லத்தையும் மூடுமாறு மருத்துவத்துறை நெறியாளர் கருத்துதெரிவித்தார். இத்திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டது எனவே மருத்துவ மனையும் மகப்பேறு இல்லமும் 22—2—1967 முதல் 21—5—1967 வரையில் மூடப்பட்டிருந்தன.

(உ) வாடகைக்கு வேறு கட்டிடம் அமர்த்தப்பட்டது. சேத்தியாத்தோப்பிலுள்ள அரசு மருத்துவ மனையும் மகப்பேறு இல்லமும் அந்த வாடகைக் கட்டிடத்தில் 22—5—1967 முதல் மீண்டும் செயல்படத் தொடங்கின.